JUNIOR

# PRIMARY COURSE

OF

# Tamil Composition

FOR

## STANDARDS I & II

## இளைஞர் சொற்றொடராக்கம்.

BY

T. V. CHELLAPPA SASTRY, B. A. L. T.,

*(Head Master, Late C. S. M. Institution, Madras.)*

Madras;

T. V. CHELLAPPA SASTRY & SONS.

1915

[...istered Copy Right.] [PRICE 3 ANNAS.

தமிழ்

# இங்கிலீஷ் சொற்றொடராக்கம்.

[இது I, II, ஸ்டாண்டர்களுக் குரியது.]

இது

சென்னை, வி. எஸ். எம். ஹைஸ்கூல்

ஹெட்மாஸ்டர்,

டி. வி. செல்லப்பசாஸ்திரியார், பீ. ஏ., எல், டி.,

எழுதியது.

சென்னை:

டி. வி. செல்லப்பசாஸ்திரி அண்டு சன்ஸ்

வெளியிட்டது.

1915.

காப்பிரைட்டு ரிஜிஸ்தர் செய்தது.] [விலை அணா 3.

PRINTED AT THE
T. V. C. PRESS,
WALL TAX ROAD, MADRAS.

ஸ்ரீ

# முகவுரை.

தமிழ்மொழியைப் பயிலுஞ் சிறு மாணவர்க்கென இப்பொழுது வசனத்தில் ஏற்பட்டுள்ள இலக்கணங்களை அவைகள் அமைந்துள்ள வகையினின்று மாற்றி வேறு வகையின் எழுதவேண்டுமென்று பல நாட்களாக எண்ணியிருந்தேன். ஆயினும் எனக்கு அங்ஙனஞ் செய்தற்குரிய சாவதானமும் அநுகூலமும் வாய்த்திலாமையின் அங்ஙனஞ் செய்து முடித்தற் கியலாதவனா யிருந்தேன். சென்ற இரண்டு வருஷங்களுக்குமுன் தேசபாஷைகளில் வியாசமெழுதுதல் மாணவர்களுக்குக் கட்டாயப் பாடங்களி லொன்றா யேற்படுத்தப்பட்டமை எனக்குத் தெரிந்தபிறகு முன்னிருந்த எண்ணத்தைமாற்றி மாணவர்கள் வாக்கியங்களை வகைபெறவமையும் வழிகளை யறிதற்குரிய இலக்கணமொன்றை எழுதவேண்டுமென் றெண்ணி யான் பலநாட்களாக வாக்கியங்களைப்பற்றிக் குறித்துவந்த வகைகளையெல்லா மொருங்குதிரட்டி இந்நூலை யெழுதத் தொடங்கினேன். அங்ஙனந் தொடங்கியபோது தமிழ்ப் பாடத்தை விருப்பமான பாடங்களி லொன்றாக எடுத்துக்கொண்ட மாணவர்களுக்கே யன்றி அங்ஙனம் எடுத்துக்கொள்ளாத மாணவர்களுக்கும் வியாசமெழுதுதல் கட்டாயப் பாடமாக ஏற்பட்டிருத்தலையும், எழுத்தைப்பற்றியும் சொல்லைப்

பற்றியும் ஒன்றுந் தெரிந்துகொள்ளாதவர்களுக்கு வாக்கிய வகைகளை யுணர்ந்து எழுதுதல் கூடாமையையும் உன்னி வாக்கிய வகைகளை யுணர்தற்கு வேண்டிய அளவாகவும், மாணவர்கள் சொற்பகாலத்திற் படித்தறிந்துகொள்ளும் படியாகவும் அவ்விரண்டிலக்கணங்களையுஞ் சொற்பமாக முன்னேயமைத்து இந்நூலை யெழுதிமுடித்தேன். இந்நூலி லுள்ள உரு-ம் பக்கமுதல் ௬௬-ம் பக்கம்வரையினும் வாக்கியத்தைப்பற்றியுள்ள விஷயங்களே, யான் அவ்வப் போது வாக்கியத்தைப்பற்றி குறித்துவைத்திருந்து எழுதிய விஷயங்களாகும். ௬ரு-ம் பக்கத்திலுள்ள தனிநிலை வாக்கியம், தொடர்நிலை வாக்கியம், கலப்பு வாக்கியம் என்பன, (Simple sentence, Complex sentence, Compound sentence) என்பவற்றின் மொழிபெயர்ப் பாகத் தமிழில் வழங்குகின்றன. ௬எ-ம் பக்கத்தில் உள்ள நேர்நிலையுண்மொழி, நேர்நிலையின்மொழி என்னும் இருவகை வாக்கியப் பெயர்களையும் அவற்றின் இலக்கணங் களையும் (Direct speech, Indirect speech) என்பவற்றை நோக்கிப் புதுவனவாக எழுதிச் சேர்த்தேன். மற்றையவை நன்னூலிற் பொதுவியலி லுள்ளவைகளே. வாக்கிய இய லுக்குமுன் அமைந்துள்ள எழுத்திலக்கண முதலியவற்றுள் ளுஞ் சில புதியவகைகள் உள்ளமை அவற்றைக் கவனிப் பார்க்கு விளங்காமற் போகாது. பாடசாலைகளிலுள்ள தமிழ்ப் பண்டிதர்கள் இதனை மாணவர்களுக்குப் பயன்படும் படி செய்து எனக்கிதுபோன்ற விஷயங்களில் ஊக்கத்தை யுண்டாக்கக் கோருகின்றேன். இதனைச் சுத்தமாக அச்சிட்

டுத்தந்த கலாரத்நாகரம் அச்சியந்திரத்தலைவர் ஸ்ரீமான் இரத்தினசபாபதி செட்டியாரவர்கட்கும், இதனை அன்புடன் வெளியிட்ட தமிழபிமானமிக்க ஸ்ரீமான் அ. மகாதேவ செட்டியாரவர்கட்கும் வந்தனம் புரிகின்றேன். தமக்குள்ள பலவேலைகளுக் கிடையில் இந்நூலை யன்புடன் கவனித்துத் தத்தம் அபிப்பிராயங்களைத் தெரிவித்த வித்துவசிரோமணிகளுக்கு யான் செய்யக்கூடிய கைம்மாறு மனமுவந்த வந்தனத்தையன்றி வேறு யாதுளது.

"கைம்மாறு வேண்டாக் கடப்பாடு மாரிமாட்
டென்னாற்றுங் கொல்லோ வுலகு."

என்பது பெரியார் வாக்கன்றே. இதில் என் சிற்றறிவிற்குத் தோன்றாமல் உளவாங் குற்றங்களை யுலகம்பொறுக்க வெனப் பலவும் பிரார்த்திக்கின்றேன்.

"சொல்லின் கூட்டமும் பொருளின் கூட்டமும்
அவ்விரண் டனையு மளவிடப் படாவே."
அவற்றுள்,

"சிறுதினைச் சிறியேன் சிறிய சிறார்தமக்
குரைத்தன னன்றியீ தொருநூ லன்றே"

"இவ்வழக் கறிந்தோ ரிகழுதல் வழக்கே
இவ்வழக் கறியா ரிகழுதல் வழக்கே."

இங்ஙனம்,
கா. ர. கோ.



The Royal Family.

# I. அத்தியாயம்.

## வாக்கியங்களின் அமைப்பு.

### 1-வது பாடம்.



அடியிற் கோடிட்ட இடங்களில் மாதிரி வாக்கியத்திற் போல் தக்க சொற்களை அமைக்க:—

மாதிரி:- சிங்கம்———. சிங்கம் கர்ஜிக்கிறது.

அப்பியாசம்:-1. பூனை———. 2. நாய்————.
3. கழுதை———. 4. நரி———. 5. கிளி———.
6. மயில்——. 7. பன்றி——.8. கோழி———.
9. எருது——. 10. யானை——. 11. காக்கை——.
12. பாம்பு ——. 13. வானம்பாடி ——.
14. தவளை——. 15. பல்லி—. 16. ஆந்தை——.

## 2-வது பாடம்.



அடியில் கோடிட்ட இடங்களில் மாதிரி வாக் யத்தி
போல் தக்க சொற்களை அமைக்க:—

மாதிரி:———சீறுகிறது. பாம்பு சீறுகிற

அப்பியாசம்:—1.———குரைக்கிறது. 2.——
ஊளையிடுகிறது. 3. ——— பேசுகிறது. 4.——
கத்துகிறது. 5. ———உறுமுகிறது. 6.—சொல்
கிறது. 7.———கூவுகிறது.8.———கர்ஜிக்கிற
9.———பிளிறுகிறது. 10.———முக்காரம் செ
கிறது. 11.———கனைக்கிறது. 12.———பா
கிறது. 13.——கத்துகிறது. 14.——அழுகிறது.

## 3-வது பாடம்.



அடியில் கோடிட்ட இடங்களில் மாதிரி வாக்கியங்
ளில் போல் தக்க சொற்களை அமைக்க:—

மாதிரி:———பார்க்கலாம். கண்ணால் பார்க்
லாம்.

கண் தெரியாதவன்——. கண் தெரியாதவன்
ருடன்.

அப்பியாசம்:—1.———வணங்கலாம். 2.———
டேட்கலாம். 3.———பேசலாம். 4.———கடிக்
லாம். 5.——உருசி அறியலாம். 6.——மோந்து
ர்க்கலாம்.7.———தொடலாம். 8.——நடக்க
ம். 9. காது கேட்காதவன் ——. 10. பேசமுடி
தவன்—.11. நடக்கமுடியாதவன்——. 12. மயிர்
ல்லாதவன்——. 13. பணம் இல்லாதவன்——.
முதுகு வளைந்திருப்பவன்———.15. உண்மை
ல்லாதவன்——. 16. அறிவு இல்லாதவன்——.

## 4-வது பாடம்.



அடியில்கோடிட்ட இடங்களில் மாதிரி வாக்கியத்தில் போல் தக்க பதங்களை அமைக்க:—

மாதிரி:—யானையை நடத்துகிறவன்——.

யானையை நடத்துகிறவன் பாகன்.

அப்பியாசம்:—1. மாடுமேய்க்கிறவன்—. 2. ஆடு மேய்க்கிறவன்———. 3. வண்டி ஓட்டுகிறவன்——. 4. தேரை ஓட்டுகிறவன்——. 5. எண்ணெய் விற்கிறவன்——. 6. மருந்து கொடுக்கிறவன்——. 7. பானை செய்கிறவன்——. 8. நகை செய்கிறவன்——. 9. துணி நெய்கிறவன்——. 10. மூட்டை தூக்குகிறவன்——. 11. மீன் பிடிக்கிறவன்——.12.பக்ஷி பிடிக்கிறவன்——. 13. மரம் வேலை செய்கிறவன்——. 14. கள் இறக்குகிறவன்——. 15. துணியை வெளுக்கிறவன்——.

## 5-வது பாடம்.



அடியில் கோடிட்ட இடங்களில் தக்க சொற்களை அமைக்க:—

மாதிரி:—1. மணியை———.மணியை அடிப்பார்கள்.

2. வயலுக்கு———பாய்ச்சுவார்கள்.
வயலுக்குத் தண்ணீர் பாய்ச்சுவார்கள்.

அப்பியாசம்:—1. இடி———.2. மின்னல்——. 3. காற்று—. 4. நெருப்பு—. 5. சூரியன்—உதிக்கும். 6. சூரியன்———அஸ்தமிக்கும். 7. நக்ஷத்திரங்கள்———பிரகாசிக்கும்.8. வயலில்———பிடுங்குவார்கள். 9. களத்தில்———த் தூற்றுவார்கள். 10. புளியமரத்தில்——உலுக்குவார்கள். 11. ஆபரணங்களை———அணிவார்கள். 12. குடியானவர்கள் ———ப்போர்போடுவார்கள். 13. உடம்பில்——த் தரிப்பார்கள். 14. தலையில்—ச் சூட்டுவார்கள்.

## 6-வது பாடம்.



அடியில் வரும் வாக்கியங்களில் கோடிட்ட இடங்களில் மாதிரிவாக்கியத்தில் போல் தக்க சொற்களை அமைக்க:—

மாதிரி:——*தண்ணீரில் நீந்துகிறது.*

*தவளை தண்ணீரில் நீந்துகிறது.*

அப்பியாசம்:—1.— ஆடுமேய்க்கிறான். 2.—— தேரை ஓட்டுகிறான். 3.——எண்ணெய் விற்கிறான். 4.——வியாதிக்குத் தக்க மருந்து கொடுப்பான். 5.—— துணிநெய்வான். 6.——வண்டிஓட்டுகிறான். 7.——காலையில் கிழக்கில் உதிக்கும். 8.—ஆகாயத்தில் பறக்கும். 9.——ஆகாயத்தில் பிரகாசிக்கும். 10.—— ஆட்டுமந்தையைக் காக்கும். 11.—— நிலத்தை உழுவான். 12.——மாட்டை மந்தைக்கு ஓட்டுவான். 13.——மரவேலைகள் செய்வான். 14.——பாம்பை ஆட்டுவான். 15.—— துணிகளை வெளுப்பான்.

## 7-வது பாடம்.



அடியில் கோடிட்ட இடங்களில் மாதிரி வாக்கியத்திற் போல், அடியிற் கூறப்பட்டிருப்பவைகளின் சிறியவைகளைக் குறிக்கத் தக்க பதங்களை அமைக்க:—

மாதிரி:—மீன்———தண்ணீரில் நீந்துகிறது.

மீன் குட்டி தண்ணீரில் நீந்துகிறது.

அப்பியாசம்.—1. பசு———வயலில் துள்ளி விளையாடுகிறது. 2. வாழை———நன்றாய் வளர்ந்திருக்கின்றது. 3. பன்றி———நாயின் மீது உறுமுகிறது. 4. கோழி———வீதியில் மேய்கிறது. 5. பூனை——கூடத்தில் விளையாடுகிறது. 6. தென்னம்———தண்ணீரில்லாமல் பட்டுப்போயிற்று. 7. எலி——வளையில் நுழைந்தது. 8. காக்கை——பார்வைக்கு அழகாய் இராது. 9. நாய்—பால் குடிக்கின்றது. 10. அணில்———மரத்தில் ஏறுகின்றது. 11. மான்————பார்வைக்கு அழகாய் இருக்கும். 12. கிளி———கூட்டில் பேசுகிறது.

## 8-வது பாடம்.



பின்வரும் வாக்கியங்களிலுள்ள ஆண்பாற் பதங்களை பெண்பாற் பதங்களாக மாற்றி எழுதுக:—

மாதிரி:— இவன் ஒரு தட்டான்.
இவள் ஒரு தட்டாத்தி.
என் தகப்பனுர் வீட்டில் இருக்கிருர்.
என் தாயார் வீட்டில் இருக்கிருள்.

அப்பியாசம்:—

1. குயவன் பானைகள் செய்வான்.
2. வேலைக்காரன் கடைக்குச் சென்ருன்.
3. இடையன் ஆடுகளை மேய்த்து வருவான்.
4. அவனுடைய குமாரன் பள்ளிக்கூடத்தில் படிக்கிருன்.
5. இதோ! குருடன் ஒருவன் எதிரில் வருகிருன்.
6. தோட்டக்காரன் செடிகளுக்குத் தண்ணீர் பாய்ச்சுகிருன்.

7. இந்த வாணியன் நேற்றையதினம் எண்ணெய் கொண்டுவந்தான்.

8. இந்த எருமைக்கடாவை என்ன விலேக்கு வாங்கினுய்?

9. இவன் மிகவும் கெட்டவன்.

10. இந்தச் சேவல் என்னுடையது.

11. இவன் என் துணிகளை வெளுக்கும் வண்ணுன்.

12. இவன் ஒரு பெரிய பணக்காரன்.

13. இந்தத் தையற்காரன் நன்ருய்ச் சட்டைகளைத் தைப்பான்.

14. இவன் என்னுடைய தோழன்.

15. உன் தமையனின் பெயர் என்ன?

16. அரசன், குடிகளின்மேல் அதிக பக்ஷமாய் இருக்கிருன்.

17. என்னுடைய தம்பி மதுரையில் இருக்கிருன்.

18. அவனுடைய பாட்டனுர் நேற்றையதினம் சென்னைக்குச் சென்ருர்.

19. அவனுடைய பேரன்மார்கள் இன்றையதினம் இங்கு வருவார்கள்.

20. உன் தந்தை என்னைப்பலதரம் வைதான்.

---

## 9—வது பாடம்.

பின்வரும் வாக்கியங்களிலுள்ள பெண்பால் பதங்களை ஆண்பால் பதங்களாக மாற்றி எழுதுக:—

மாதிரி:—1. என் மகள் பரீக்ஷையில் தேறினுள். என் மகன் பரீக்ஷையில் தேறினுன்.

2. அந்தக் குறத்தி ஒரு பாயை முடைந்தாள். அந்தக் குறவன் ஒரு பாயை முடைந்தான்.

அப்பியாசம்:—1. என் அக்காள் கோவிலுக்குச் சென்ருள். 2. நேற்றையதினம் கடை வீதியில் ஒரு தமிழச்சியையும், ஒரு தெலுங்கச்சியையும் கண்டேன். 3. இவள் ஒரு கூனி. 4, என் சகோதரி என்னை நதிக்கு அழைத்துச்சென்ருள். 5. ஒரு இராக்ஷஸி அந்தத் தீவில் அரசாண்டு கொண்டிருந்தாள். 6. அந்தப் பசுவை என்னவிலைக்கு வாங்கினுய் 7. இவள் மிகவும் நல்லவள். 8. அந்தப் பார்ப்பாத்தி நல்ல குணவதி. 9. அவள் அம்பட்டச்சியைக் கூப்பிடச் சென்ருள். 10. இதோ வருகிற செம்படவச்சியிடம் ஒருபெரியமீன்இருக்கின்றது.11. அவள் தன் புத்திரிக்குக் கலியாணம் செய்தாள். 12. அவள் தன் தோழியுடன் தோட்டத்தில் உலாவினுள். 13. ஒரு கிறிஸ்தவச்சி எனக்குத் தினந்தோறும் தையல்வேலை கற்றுக் கொடுக்கிருள். 14. குசத்தி நேற்றையதினம் பானைகள் கொண்டு வந்தாள். 15. இடைச்சி பால்விற்கிருள்.

## 10—வது பாடம்.

அடியில் வரும் வாக்கியங்களிலுள்ள ஒருமைப் பதங்களைப் பன்மைப் பதங்களாக மாற்றி எழுதுக:—

மாதிரி:—பூனையின் பாதம் மிருதுவாய் இருக்கிறது. பூனைகளின் பாதங்கள் மிருதுவாய் இருக்கின்றன.

அப்பியாசம்:—1. ஆண்யானைக்குத் தந்தம் இருக்கிறது. 2. யானைக்குத் தும்பிக்கை உண்டு. 3. யானையின் கால் தூண்போல் இருக்கும். 4. கோழி கூறையில் கூவுகிறது. 5. குயில் வனத்தில் கூவுகிறது. 6. சிங்கம் குகையில் கர்ஜிக்கிறது. 7. தேனீ சுறுசுறுப்புள்ள ஜந்து. 8. கழுதை தெருவில் கத்துகிறது. 9. கிளி கூட்டில் பேசுகிறது. 10. அவன் செடியில் பூப்பறித்தான். 11. குடியானவன் வயலில் கதிரை அறுத்தான். 12. நான் புளியமரத்தில் பழம் உலுக்கினேன். 13. இந்த ரோஜாப்பூ அதிக வாசனையுள்ளது. 14. கூலிக்காரன் மூட்டையைத் தூக்குகிறான். 15. நீ எங்கே சென்றாய். 16. நான் தோட்டத்தில் உலாவிக் கொண்டிருந்தேன். 17. அது விரைவாய் ஓடுகிறது. 18. அவன் என்னைத் திட்டினான். 19. நான் உன்னைத் தண்டிப்பேன். 20. நீ அவனை இங்கு அழைத்துக் கொண்டு வா.

---

## 11—வது பாடம்.

அடியில் வரும் வாக்கியங்களிலுள்ள பன்மைப்பதங்களை ஒருமைப் பதங்களாக மாற்றி எழுதுக:—

மாதிரி:— நாங்கள் நேற்றையதினம் கடற்கரையில் விளையாடினோம்-நான் நேற்றையதினம் கடற்கரையில் விளையாடினேன்.

அப்பியாசம்:— 1. நரிகள் வயலில் ஊளையிடுகின்றன. 2. பன்றிகள் காட்டில் உறுமுகின்றன. 3. சிங்கங்கள் யானைகளின் மீது பாய்கின்றன. 4. மரங்களில் பழங்கள் பழுத்திருக்கின்றன. 5. அவர்கள் திருடர்களைப் பிடித்தார்கள், 6. நீங்கள் எங்களை ஏன் வரவழைத்தீர்கள்?7. நாங்கள் உங்களை விருந்துக்கு வரவழைத்தோம். 8. நீங்கள் அவர்களுடன் பேசினீர்கள். 9. சிறுவர்கள் பள்ளிக்கூடத்துக்குப் போகிறார்கள். 10. காக்கைகள் புழுக்களைத் தின்கின்றன. 11. பசுக்கள் பாலைக்கொடுக்கின்றன. 12. மிருகங்களில் பெரியவை யானைகள். 13. தவளைகள் குளத்தில் நீந்துகின்றன. 14. மனிதர்கள் அறிவுள்ளவர்கள். 15. பிள்ளைகள் வஸ்திரங்களைத் தரித்தார்கள். 16. தோட்டங்களில் மரங்கள் செழித்து வளர்கின்றன. 17. ஈக்களுக்குக் கால்கள் நீளமானவை. 18. நல்லவர்கள் நன்மை செய்வார்கள். 19. சுண்டெலிகள் வீடுகளிலுள்ள பொருள்களை நாசமாக்குகின்றன. 20. துஷ்டர்கள் அயலார்களுக்குக் கெடுதி செய்வார்கள்.

## 12—வது பாடம்.

அடியில் வரும் வாக்கியங்களில் குறைவா யிருக்கும் சொற்களை காரியம் நடப்பதாகத் தெரிவிக்க, மாதிரி வாக்கியத்திற் போல பூர்த்திசெய்க:—

மாதிரி:—இராமன் பள்ளிக்கூடத்துக்குப்போ—. இராமன் பள்ளிக்கூடத்துக்குப் போகிறுன்.

அப்பியாசம்:—1. நான் கடற்கரைக்குச்செல்—. 2. இப்பொழுது நீ என்ன பாடம் படி—. 3. இந்தக் குதிரை அதிக வேகமாய் ஓடு—. 4. தோட்டத்தில் மரங்கள் வளர்—5. தோட்டக்காரன் மரங்களுக்குத் தண்ணீர் பாய்ச்சு—. 6. நீ இப்பொழுது எந்த ஊரிலிருந்து வா—. 7. மாடுகள் மைதானத்தில் மேய்—.8.குழந்தை ஏணையில் தூங்கு—. 9. தனம்மாள் நன்ருய்ப் பாடு—. 10. நீங்கள் ஏன் அவனுடன் பேசு? 11. செடிகள் தண்ணீரில்லாமையால் வாடு—. 12. பாம்பு மார்பால் நகர்—. 13. தினந்தோறும் காலையில் புஷ்பங்கள் மலர்—. 14. வாணியன் எண்ணெய் வில்—. 15. பாம்பு மனிதன் மீது சீறு. 16. எலி சரேலென்று வளைக்குள் நுழை—. 17. நான் என் தகப்பனுருக்குக் கடிதம் எழுது—. 18. பசு கன்றைத் தேடு—. 19. கங்கை நதி வங்காள விரி குடாவில் விழு—. 20, நீங்கள் தினமொன்றுக்கு எத்தனை முழம் நெய்—?

## 13—வது பாடம்.

அடியில் வரும் வாக்கியங்களில் குறைவாயிருக்கும் சொற்களை, காரியம் நடந்துவிட்டதாகத் தெரிவிக்க ஏற்ற வாறு மாதிரிவாக்கியத்திற்போல பூர்த்தியாக்கி எழுதுக:—

மாதிரி:— என் தகப்பனார் நேற்றையதினம் இங்கு வா——.என் தகப்பனார் நேற்றையதினம் இங்கு வந்தார்.

அப்பியாசம்:—1. நான் அந்தத் · திருடனைப் பிடி——. 2. சென்ற மாதம் நான் மதுரைக்குப் போ——. 3. நான் கோவிலுக்குப் போய்க் கடவுளைத் தொழு——. 4. ஒரு ஊரில் ஒரு பிராமணன் இரு—.5.எலி வளையில் நுழை.—6. நீ நேற்றைய தினம் நன்றாய்ப் பாடு——. 7. நீ அந்தக்குதிரையை என்ன விலைக்கு வாங்கு——? 8. நாங்கள் கடற்கரைக்குச் செல்——. . நீங்கள் இந்தக்கெட்ட காரியத்தை ஏன் செய்——? 10. நேற்றையதினம் ஏன் நீ வெகுநேரம் தூங்கு——? 11. அவன் என் மாடுகளை மேய்——. 12. ஒரு முயலின்மேல் அவன் அம்பை எய்——. 13. ஓநாய் ஆட்டுக்குட்டியைக் கொல்——. 14. அவள் தன்குழந்தையை வீதியெங்கும் தேடு——. 15. இராமனுடைய குதிரை அதிகவேகமாய் ஓடு——. 16. நாங்கள் கடற்கரையில் உட்காரு——. 17. அவன், திருடன் போன வழியை எனக்குக் காட்டு——. 18. கோபாலன் நாயின்மேல் கல்லை எறி——. 19. மழை பெய்தவுடன் குடியானவர்கள் நிலங்களை நன்றாய் உழு——. 20. இரண்டு பூனைகள் ஒரு வீட்டிலிருந்து ஓர் அப்பத்தைத் திருடிக்கொண்டு வா——.

## 14—வது பாடம்.

அடியில் வரும் வாக்கியங்களில் குறைவா யிருக்கும் சொற்களை, காரியம் இனி நடக்கப்போவதாகத் தெரிவிக்க, மாதிரிவாக்கியத்திற்போல் தக்கவாறு பூர்த்தியாக்கிஎழுதுக:-

மாதிரி:—பள்ளிக்கூடத்துக்கு நேரம் சென்று போனால், உபாத்தியாயர் அடி——. பள்ளிக்கூடத்துக்கு நேரம் சென்றுபோனால், உபாத்தியாயர் அடிப்பார்.

அப்பியாசம்:—அவன் நாளையதினம் இங்கு வா——. 2. மீனாக்ஷி நன்றாய்ப் பாடு——. 3. தபால்காரன் கடிதங்களைக் கொடு——. 4. குதிரை அதிக வேகமாய் ஓடு——.5.நெருப்பு எரி——. 6. மடையைத் திறந்தால் வயலுக்குத் தண்ணீர் பாய்——. 7. பாம்பு படத்தை விரித்து ஆடு——. 8. மதுரையில் சைத்திர உத்ஸவத்துக்கு அநேக ஜனங்கள் வந்து கூடு——. 9. குடியானவன் வயலில் நாற்றுக்களை நடு——. 10. வேலைக்காரன் மரத்தை நாளையதினம் வெட்டு——. 11. உபாத்தியாயர் பூகோள சாஸ்திரத்தில் கேள்விகள் கேள்——. 12. கெட்டபிள்ளைகள் நாயின்மேல் கல்லை எறி——. 13. இராமன் நன்றாய்ப் பாடம் படி——. 14. மாட்டுக்காரன் மாடுகளை மந்தைக்கு ஓட்டு——. 15. அவன் தினந்தோறும் கூலிக்கு வேலை செய்—— 16. சுந்தரம் மாடுகளுக்குத் தண்ணீர் காட்டு——. 17. நீ இப்புத்தகத்தை என்ன விலைக்கு வில்——?. 18. அவர் எனக்கு வெகுமானம் கொடு—— 19. நீ எத்தனை மணிநேரம் தூங்கு——? 20. என் தகப்பனார் எனக்குக் கடிதம் எழுது——.

## 15—வது பாடம்.

அடியில் வரும் வாக்கியங்களில் குறைவாயிருக்கும் சொற்களை, முதலாவது காரியம், நடப்பதாகத் தெரிவிக்கவும் இரண்டாவது, காரியம் நடந்துவிட்டதாகத் தெரிவிக்கவும், மூன்றாவது காரியம் இனிநடக்கப்போவதாகத் தெரிவிக்கவும், மாதிரி வாக்கியத்திற்போல, ஏற்றவாறு பூர்த்திசெய்து எழுதுக:-

மாதிரி:—*நான் பாடம் படிக்கிறேன்.*

*நான் பாடம் படித்தேன்.*

*நான் பாடம் படிப்பேன்.*

அப்பியாசம்:—1. *அவன் மதுரைக்குப் போ—.* 2. *அவன் தோட்டத்தில் ஒரு மாங்கன்றை நடு—.* 3. *குதிரை நன்ருய் ஓடு——.* 4. *அவன் என் குணத்தை நன்ருய் அறி——.* 5. *குடியானவன் நிலத்தை நன்ருய் உழு——.* 6. *தையற்காரன் உடைகளைத் தை——.* 7. *நீ அரிசி மூட்டையை என்ன விலைக்கு வாங்கு——?* 8. *சாணன் மரத்தின் மீது ஏறு——.* 9. *ஆடுமாடுகள் மைதானத்தில் மேய்——.* 10. *என் தகப்பனார் எனக்கு நற்புத்திகளைப் போதி——.* 11. *புலி தரையில் கிடந்து புரள்——.* 12. *இதோ நமக்கு எதிரில் கப்பலொன்று போ————.* 13. *உபாத்தியாயர் சொல்வதை நான் நன்ருய்க் கவனி——.* 14. *இராமன் எந்தக் காரியத்தையும் நன்ருய்ச் செய்——.* 15. *கோபாலன் கோயிலுக்குச் சென்று கடவுளைத் தொழு——.* 16. *என் தகப்பனார் இந்த நாற்காலியில் உட்காரு——.* 17. *பாம்பு புத்துக்குள் நுழை——.* 18. *மீனாக்ஷி நன்ருய்ச் சமை——.* 19. *நான் அந்தமரத்தை வெட்டு——.* 20. *அவன் பள்ளிக்கூடத்தில் பெஞ்சியின் மேல் நில்——.*

---

## 16—வது பாடம்.

அடியில் வரும் வாக்கியங்களில் குறைவாயிருக்கும் சொற்களை அர்த்தம் உண்டாகும்படி மாதிரி வாக்கியத்திற் போல தக்கவாறு பூர்த்தி செய்க:—

மாதிரி:— நான் அவன் ——அடித்தேன்.

நான் அவனை அடித்தேன்.

இராமன்——இரண்டு சகோதரர்கள் இருக்கிறார்கள்.

இராமனுக்கு இரண்டு சகோதரர்கள் இருக்கிறார்கள்.

அப்பியாசம்:—1. அவன் நதி——ஸ்நாநம் செய்தான் 2. என் தகப்பனார் கும்பகோணம்—— சென்றார். 3. இராமன் மதுரை——இன்று வந்தான். 4. தோட்டம்——போய் பூப் பறித்துக் கொண்டு வா. 5. கோபாலன் நாயைக் கல்—— அடித்தான். 6. கோழி கூரை——கூவுகிறது. 7. குடியானவன் வயல்——தண்ணீர் பாய்ச்சுகிறான். 8. இந்த மாடு——என்ன விலைக்கு வாங்கினாய்? 9. அவன் கிணறு——குதித்தான். 10. வண்ணான் துணி——வெளுப்பான். 11. பிள்ளைகள் கடற்கரை——ப்போகிறார்கள். 12. வாய்—பேசலாம். 13. மூக்கு——மோந்து பார்க்கலாம். . நாக்கு—உருசி அறியலாம். 15. கண்—பார்க்கலாம்.16.இடையன் ஆடுமாடுகள்—மேய்க்கிறான்.

17. இது கோவிந்தன்——பசு. 18. என் மாடு மலை ——ஓரத்தில்மேய்கிறது. 19.குதிரை——கால்கள் முறிந்தன. 20. இராமன்——வயது பன்னிரண்டு 21. அவன் நீ ——அடித்தான். 22. அவர்கள் நாம்——அழைப்பார்கள்.

---

## 17—வது பாடம்.

அடியில்வரும் வாக்கியங்களில் கோடிட்ட இடங்களில் கீழேகொடுத்திருக்கும்சொற்களில் தக்கவைகளை அமைக்க:-

பிளவுபட்டிரா,விளையாட்டாகவும்,தலைகீழாக, அடுப்பு எரிக்க, நாணல்போல, சோதித்து, கவலை யற்ற, ஆராயாமல், அடங்கிப் பங்கிட்டுக்கொள் ளல், ஈரமான, பாலில், கண்.

1. குதிரையின் குளம்புகள்,பசுக்களின் குளம் புகள் போல——. 2. எவரும்——பொய் பேச லாகாது. 3. வெளவால் மரம் முதலியவைகளில் ——த்தொங்கும். 4. தென்னைமட்டை—உதவும். 5. நாம் அயலாருக்கு——வணக்கமாய் இருக்க வேண்டும். 6. பிறர் ஒன்றைச் சொன்னால், நீ அதை—செய். 7.—வாழ்வே சிறந்த வாழ்வாம். 8. அவனுடைய வார்த்தையில்—அதிக நம்பிக்கை வைத்தலாகாது. 9. அற்ப நஷ்டத்தைப் பாரா மல்——நன்றே. 10. தவளைகள் பெரும்பாலும்— இடங்களிலேயே வசிக்கும். 11. பூனைகளுக்குப்— அதிக விருப்பம் உண்டு. 12. பாம்புக்குக்—காதாக உதவுகின்றது, என்று சொல்லுகிறார்கள்.

---

## 18—வது பாடம்.

அடியில் வரும் வாக்கியங்களில் கோடிட்ட இடங்களில் கீழே கொடுத்திருக்கும் சொற்களில் தக்கவைகளை அமைக்க:-

பிரீதியாய், ஆனால், எவ்வளவு, அப்போது, என்று, பெரிது, அதனால்.

1. நாம் நம்முடைய சகோதரர்களுடன்—— இருக்கவேண்டும். 2. ஆண் மானின் கொம்புகள் வருஷத்துக் கொருமுறை கீழே உதிர்ந்துவிடும். ——அந்த மான் அதிகமாய் வெளிவராமல் காட்டுக்குள் போயிருக்கும். 3. இந்தப் படம்——அழகாயிருக்கின்றது பார்! 4. இராமன் மிக புத்திசாலியல்ல;—அவன் விடா • முயற்சி யுடையவன். 5. கழுகு பக்ஷிகளில்——. 6. அவன் நன்றாய்ப் படிக்கவில்லை.——அவன் பரீக்ஷையில் தேறவில்லை. 7. நீயார்? உன் பெயரென்ன?——அரசன் கேட்டான்.

---

## 19—வது பாடம்.

அடியில் கொடுத்திருக்கும் சொற்களில் ஒவ்வொன்றையும் பற்றி நான்கு வாக்கியங்கள் எழுதுக:—

1. யானை, 2. புலி, 3. எலி, 4. பூனை, 5. தவளை 6. நெருப்பு, 7. கடை, 8. வண்டி, 9. எருது, 10. மயில், 11. கழுதை, 12. மேசை, 13. காகிதம், 14. பள்ளிக்கூடம், 15. நாற்காலி, 16. புஸ்தகம், 17. சமுத்திரம், 18. ஆறு, 19. குளம், 20. தோட்

டம். 21. தென்னைமரம். 22. வயல், 23. குதிரை, 24. நாய், 25. ஆடு, 26. கத்தி, 27. நாகப்பாம்பு, 28. ஆலமரம், 29. பனைமரம், 30. மலை, 31. மான், 32. விசிறி, 33. ஆடு, 34. பசு, 35. கோழி, 36. குரங்கு, 37. கிளி, 38. வீடு, 39. வாழைமரம், 40. முயல்.

---

## *II.* அத்தியாயம்.

### வாக்கியங்களின் சேர்க்கை.

### 1—வது பாடம்.

அடியில் வரும் பல சிறு வாக்கியங்களை மாதிரி வாக்கியத்தைப்போல ஒரே வாக்கியமாகச் சேர்த்து எழுதுக:—

மாதிரி:—1. இராமன்கடற்கரைக்குச்சென்றான். கோபாலன் கடற்கரைக்குச் சென்றான். இராமனும் கோபாலனும் கடற்கரைக்குச் சென்றார்கள்.

2. நான் இராமனைக் கண்டேன். நான் கோபாலனைக் கண்டேன். நான் இராமனையும் கோபாலனையும் கண்டேன்.

அப்பியாசம்:—1. காக்கை ஆலம் பழத்தைத் தின்னும். காக்கை வேப்பம்பழத்தைத் தின்னும். 2. அவன் என்னை அழைத்தான். அவன் என் தம்பியைஅழைத்தான். 3. கண்ணன் என்னை அடித்தான். கோவிந்தன் என்னை அடித்தான். 4. குப்புசாமி இந்துதேச சரித்திரத்தைப்படித்தான் குப்புசாமி பூகோள சாஸ்திரத்தைப் படித்தான். 5. நான் நேற்றையதினம் கடற்கரைக்குச் சென்

றேன். நான் இன்றையதினம் கடற்கரைக்குச் சென்றேன். 6. மயில் காட்டில் இருக்கும். மயில் மலையில் இருக்கும். 7. நாய்கள் மாமிசத்தைத் தின்னும். நாய்கள் சோற்றைத் தின்னும். 8. நாய்கள் யஜமானனைக்காக்கும். நாய் தன் யஜமானனுடைய பொருள்களைக்காக்கும். 9. ஆட்டின்தோல் பைகள் தைக்க உதவும். அது பாதரட்சை செய்ய உதவும். அது கத்தி உறைகள்செய்ய உதவும். 10. காக்கை நாவல் பழத்தைத் தின்னும். அது ஆலம் பழத்தைத் தின்னும். அது வேப்பம்பழத்தைத் தின்னும். 11. புலி குரூரமுள்ள ஜந்து. அது பராக்கிரமமுள்ள ஜந்து. 12. வௌவாலுக்குச் சிறகு உண்டு. அதற்குப் பற்கள் உண்டு. 13. நோய்கொண்ட கலைமான் நோயால் வருந்தியது. அது ஆகாரம் இல்லாமையால் வருந்தியது. 14. தென்னை ஆற்றோரங்களில் விசேஷமாய்ப் பயிராகும். அது கடற்கரைகளில் விசேஷமாய்ப் பயிராகும். 15. தேங்காய் தின்பதற்கு உதவும். அது எண்ணெய் இறக்குவதற்கு உதவும்.

---

## 2—வது பாடம்.

அடியில் வரும் பல சிறு வாக்கியங்களை மாதிரி வாக்கியத்தைப்போல ஒரே வாக்கியமாகச் சேர்த்து எழுதுக:—

மாதிரி:— நீ மதுரைக்குப் போகவேண்டும். நீ தஞ்சாவூருக்குப்போகவேண்டும்.— நீ மதுரைக்காவது தஞ்சாவூருக்காவது போகவேண்டும்.

அப்பியாசம்:—1. எனக்கு ஒரு புஸ்தகம் தேவை. எனக்கு ஒரு நோட்டுப்புத்தகம் தேவை. 2. நீ படிக்கவேண்டும். நீ படுத்து உறங்கவேண்டும். 3. நீ என்னை அழைக்கவேண்டும். உன் மகன் என்னை அழைக்கவேண்டும். 4. நான் உன் வீட்டுக்கு வருவேன். என் மகன் உன் வீட்டுக்கு வருவான். 5. வயல்சுண்டெலி வயலில் இருக்கும். அது காடுகளில் இருக்கும். 6. நாகம் மனிதர்களைக் கண்டால், தன் படத்தை விரித்து ஆடும். அது சில ஜந்துக்களைக் கண்டால் தன் படத்தை விரித்து ஆடும். 7. பூனை இளம் வெயிலில் படுத்துறங்கும். அது அடுப்பண்டை படுத்துறங்கும். 8. புலி ஆற்றோரங்களில் பதுங்கி இருக்கும். அது காடுகளில் பதுங்கி இருக்கும். 9. நான் என் தகப்பனுருடன் கடற்கரைக்குச் செல்வேன், நான் என் அண்ணனுடன் கடற்கரைக்குச் செல்வேன். 10. நான் உன்னை பம்பாயில் சந்திப்பேன். நான் உன்னை கல்கத்தாவில் சந்திப்பேன்.

---

## 3—வது பாடம்.

அடியில் வரும் பல சிறு வாக்கியங்களை மாதிரி வாக்கியத்தைப்போல் சேர்த்து ஒரே வாக்கியமாக எழுதுக:—

மாதிரி:—நான் பள்ளிக்கூடம் சென்றேன், பாடம் படித்தேன்.—நான் பள்ளிக்கூடம் சென்று பாடம் படித்தேன்.

அப்பியாசம்.—1. இராமன் கடற்கரைக்குப் போனான். ஒரு கப்பலைப் பார்த்தான். 2. ஒரு நாய் அங்கும் இங்கும் உலாவித்திரிந்தது. அது கடைசியில் கடை வீதிக்குச் சென்றது. 3. ஒரு துஷ்டப் பையன் ஒரு சிறு நாயைப் பிடித்தான். அவன் அதை நதியில் எறிவதற்காக இழுத்துக் கொண்டிருந்தான். 4. இராமன் தன் தம்பியை அழைத்துக்கொண்டான். காட்டில் உலாவச் சென்றான். 5. கோவிந்தன் தன் பலகையை எடுத்துக்கொண்டான். பள்ளிக்கூடம் சென்றான். 6. கோபாலன் தோட்டத்துக்குள் நுழைந்தான். மாமரத்தில் ஏறினான். ஒரு மாங்காயைப் பறித்தான். 7. மாட்டுக்காரன் மாடுகளை மந்தைக்கு ஓட்டிக்கொண்டுபோனான். அவைகளை நன்றாய் மேய்த்தான். 8. தனம் வீணையை எடுத்தாள். நன்றாய் வாசித்தாள். 9. திருடன் அறைக்குள் நுழைந்தான். பெட்டியை எடுத்துக் கொண்டான். வெளியே ஓடினான். 10. இடைப் பையன் அதைக்கேட்டான். தலையை அசைத்தான். 11. அரசனுடைய சேவகன் கண்ணனிடம் வந்தான். அவனை அரண்மனைக்கு அழைத்துச் சென்றான். 12. கண்ணன் அரசனிடத்தில் விடை பெற்றான். தன் யஜமானனிடம் போனான். நடந்த சங்கதியைச் சொன்னான். 13. மாணிக்கம் விரைவாய் ஓடினான். வைத்தியரை அழைத்துக் கொண்டு வந்தான். 14. அவன் நதியில் ஸ்நாநம் செய்தான். கோயிலுக்குச் சென்றான். கடவுளைத் தொழுதான்.

# III. அத்தியாயம்.

## குறிப்புக்களைக் கொண்டு விஷயங்களை விவரித்தல்.

### 1. கதைக் குறிப்புக்கள்.

உபாத்தியாயருக்குக் குறிப்பு:—இங்குக் காட்டியிருக்கும் ஒவ்வொரு படமும் ஒரு கதையை விளக்குகின்றது. இக்கதைகள் பெரும்பாலும் யாவருக்கும் தெரிந்தவைகளே. ஆதலால் உபாத்தியாயர்கள், முதலில் பிள்ளைகள் படத்தைப் பார்த்துத் தங்களுக்குத்தோன்றும் விஷயங்களைச் சொல்லச் செய்யவேண்டும். பிறகு, அவ் வுபாத்தியாயர்கள் இப் படங்களால் விளங்கும் கதைகளைச் சொல்லுவதற்கான குறிப்புக்களை பிள்ளைகளுக்கு எடுத்துக் காட்டவேண்டும். அப்பால் அவர்கள் இக் கதைகளை பிள்ளைகள் தங்கள் சொந்தமொழியில் சொல்லச் செய்யவேண்டும்.

கீழ்க்காட்டியிருக்கும் படங்களில் குறிக்கப்பட்டிருக்கும் விஷயங்களை விவரிக்க.

1. விவாதத்தால் உண்டான நஷ்டம்.



## 2. நரியும், நாரையும்.



## 3 ஓநாயும்,கோக்கும்.



## 4. காக்கையும், நரியும்.



## 5. ஓநாயும், ஆட்டுக்குட்டியும்.



## 6. எலியும், தவளையும்.



## 7. வீண் பெருமைகொண்ட காக்கை.



## 2. பொருட்பாடக் குறிப்புக்கள்.

### 1. பசு.



குறிப்பு:—அடியில் வரும் கேள்விகளுக்குப் பிள்ளைகள் வாக்கியங்களாகவே விடைகள் கொடுக்கச் செய்யவேண்டும்.

கீழ் கூறப்பட்டிருக்கும் குறிப்புக்களில் ஏற்றவைகளை உபயோகித்து பின்வரும் கேள்விகளுக்கு விடைகள்கூறுக:-

குறிப்புக்கள்;—இரண்டு. பிளந்து. நீளம். குச்சாய். புல்லை. பாலை. வெண்ணெய். தயிர். கன்று.

கேள்விகள்:—1. பசுவின் தலையில் எத்தனை கொம்புகள் உண்டு.

2. அதன் குளம்பு எப்படி இருக்கும்?
3. பசுவின் வால் நீளமா, குட்டையா?
4. அதன் வால் நுனியில் மயிர்எப்படி இருக்கும்?
5. பசு எதைத் தின்னும்?

6. அது எதை நமக்குக் கொடுக்கின்றது?
7. பாலைக் காய்ச்சித் தோய்த்தால், என்ன உண்டாகும்?
8. தயிரைக் கடைந்து என்ன எடுப்பார்கள்?
9. பசுவின் குட்டிக்கு என்ன என்று பெயர்?

---

## 2. யானை.



கீழ் வரும் குறிப்புக்களில் ஏற்றவைகளை உபயோகித்துப் பின்வரும் கேள்விகளுக்கு விடைகள் எழுதுக:—

குறிப்புக்கள்:—காட்டில். பெரிய. இரண்டுகொம்புகள். தந்தம். வெண்மையாய். முறம். தூண்.சிறியவை. கருமை. தும்பிக்கை. கை, மூக்கு. மரக்கிளைகள், கரும்பு. தந்தத்தினுல். மாமிசம். மறவாத. ஒன்று. பளுவுள்ளசாமான்களை இழுக்கவும், ஏறிச் சவாரி செய்யவும். நூறு வருஷம். சாந்தமுள்ள.

கேள்விகள்:—

1. யானை எவ்விடத்தில் வசிக்கும் பிராணி?
2. யானை சிறிய மிருகமா பெரிய மிருகமா?

3. யானையின் மேல்வாயில் என்ன முளைத்து வளர்கின்றன.

4. அக்கொம்புகளுக்கு என்ன என்று பெயர்.

5. அந்தத் தந்தங்கள் என்ன நிறமாய் இருக்கும்?

6. யானையின் காது எதுபோல் இருக்கும்?

7. யானையின் கால் எதுபோல் இருக்கும்?

8. யானையின் கண்கள் எப்படிப்பட்டவை?

9. யானையின் நிறம் என்ன?

10. யானையின் முன்புறத்தில் நீண்டு தொங்கும் உறுப்புக்கு என்ன பெயர்?

11. அந்தத் தும்பிக்கை, யானைக்கு எவைகள் போல உதவுகின்றன?

12. யானை எவைகளைத் தின்னும்?

13. யானைக்கு எதில் விருப்பம் அதிகம்?

14. ஆண் யானையை எதனுல் அறிந்து கொள்ளுகிறோம்?

15. யானை எதைத் தின்னது?

16. யானை எவ்விதமான குணமுடையது?

17. பெண்யானை ஒரு தடவைக்கு எத்தனை குட்டிகள் போடும்?

18. யானை எவ்விதமாய் நமக்கு உதவுகின்றது?

19. யானை எத்தனை வருஷம் ஜீவித்திருக்கும்?

20: யானை எப்படிப்பட்ட மிருகம்?

## 3. காக்கை.



இங்குக் கொடுத்திருக்கும் குறிப்புக்களைக்கொண்டு பின் வரும் கேள்விகளுக்கு விடைகள் கொடுக்க:—

இந்தியாவிலும், இலங்கைத் தீவிலும். கருமை. பதினைந்து அங்குலம். சிறியவை. சாய்ந்த பார்வை. இனிமையாய். சற்று நீண்டு கூர்மையாய். ஒன்று, மூன்று நகங்கள். மரங்களில். சிறு குச்சி முதலியவைகளால். தானியங்கள், தின் பண்டங்கள், பழங்கள், சிறு பூச்சி புழுக்கள், முதலியவைகள். வேப்பம்பழம். தைரிய குணமும் தந்திரகுணமும். குறவர். வெடி, துப்பாக்கி சத்தம் கேட்டாலும், காக்கை கீழே விழுந்து கிடந்தாலும். அசுத்தங்களைப்போக்கும். இரவில், விடியுங்காலத்தில் கத்தும். ஐந்து. அழகாய் இராது. காக்கை, குருவி.

கேள்விகள்:—

1. காக்கை எந்தத் தேசங்களில் விசேஷம்?
2. காக்கையின் நிறமென்ன?
3. அதன் நீளம் எவ்வளவு?

4. அதன் கண்கள் எப்படிப்பட்டவை?
5. காக்கை எவ்விதமான பார்வையுடையது
6. அதன்குரல் காதுக்கு எவ்விதமாய்இராது?
7. அதன் கால்கள் எப்படி இருக்கும்?
8. காக்கையின் பாதங்களில் பின்பக்கம் எத்தனை விரல்களும் முன்பக்கம் எத்தனை விரல்களு மிருக்கும்?
9. காக்கை எங்கே கூடுகட்டும்?
10. அது எவைகளால் கூடுகட்டும்?
11. காக்கை எவைகளைத் தின்னும்?
12. அதற்கு எந்தப்பழத்தில்விருப்பம் அதிகம்?
13. காக்கை எவ்வித குணமுடையது.
14. காக்கையை யார் தின்பார்கள்?
15. காக்கைகள் எப்பொழுது பல ஒன்றுகூடிக் கத்தும்?
16. காக்கையின் உபயோகமென்ன?
17. காக்கை எப்பொழுது படுத்துறங்கும்?
18. காக்கையின் தன்மையென்ன?
19. காக்கை ஒரு தடவையில் எத்தனை முட்டைகளிடும்?
20. காக்கை பார்வைக்கு எப்படி இருக்கும்?
21. வீடுகளில் சஞ்சரிக்கும் முக்கிய பக்ஷிகள் எவை?

## 4. குதிரை.



குறிப்புக்கள்:—அழகாய். நான்கு. பிளந்து இராது. இரண்டு. நீண்டு. அடர்த்தியாய். புல், கொள், கடலை, பயறு முதலியவைகள். வண்டி இழுக்க, சவாரிசெய்ய. காப்பாற்றுகிறவனிடத்தில் பட்சமாய்.

வினுக்கள்:—

1. குதிரை பார்வைக்கு எப்படி இருக்கும்?
2. குதிரைக்குக் கால்கள் எத்தனை?
3. குதிரையின் குளம்பு எப்படியிருக்கும்?
4. குதிரைக்குக் காதுகள் எத்தனை? அவைகள் எப்படி இருக்கும்?
5. குதிரையின் வாலில் மயிர்எப்படியிருக்கும்?
6. குதிரை எவைகளைத் தின்னும்?
7. குதிரையின் உபயோகம் என்ன?
8. குதிரையின் குணம் என்ன?

## 5. பூனை.



குறிப்புக்கள்.—நீண்டு, குறுகி. தட்டையாய். நிமிர்ந்து கூர்மையாய். மிருதுவாய். கூர்மையாய் வளைந்து. இரவில். பாலில். எலி, சுண்டெலி, சிறிய பக்ஷிகள். நக்கி. இளம் வெயிலிலாவது, அடுப்பண்டையிலாவது. நான்கு. விளையாடும் குணம். நான்கு. விளையாடிக்கொண் டிருக்கின்றன. சுண்டெலி முதலியவற்றின் உபத்திரவம் இல்லாமல் இருப்பதற்காக.

வினாக்கள்:—

1. பூனையின் உடல் எப்படி யிருக்கும்?
2. பூனையின் கால்கள் எப்படி யிருக்கும்?
3. அதன் தலை எப்படி யிருக்கும்?
4. அதன் காதுகள் எப்படி யிருக்கும்?
5. அதன் பாதங்கள் எப்படி யிருக்கும்?
6. பூனையின் நகங்கள் எப்படி யிருக்கும்?
7. பூனைக்கு எப்பொழுது கண் நன்றாய்த் தெரியும்?
8. பூனைக்கு எதில் விருப்பம் அதிகம்?
9. பூனை எவைகளைத் தின்னும்?
10. பூனை பாலையாவது நீரையாவது எப்படிக் குடிக்கும்?
11. பூனை எங்கு படுத்திருக்கும் குணம் உடையது?
12. பூனை ஒரு தடவையில் எத்தனை குட்டிகள் போடும்?
13. பூனைக்குட்டிகள் என்ன குணமுடையவைகள்?
14. முன் பக்கத்திலுள்ள படத்தில் எத்தனை குட்டிகள் இருக்கின்றன?
15. அவை என்ன செய்துகொண்டிருக்கின்றன.
16. பூனையை எதற்காக வீடுகளில் வைத்து வளர்க்கிறார்கள்?

## 6. மயில்.



குறிப்புக்கள்.—மயில். இந்துதேசத்தில். நீண்டு அழகாய். ஆண்மயிலுக்கு. வீட்டுக்கூரை, மரங்கள் முதலிய உயர்ந்த இடங்களில். பன்னிரண்டு அல்லது பதினைந்து. மூன்று வருஷம். கடுமையாய்.

வினாக்கள்:—

1. பக்ஷிகளிலெல்லாம் அழகானது எது?
2. மயில் எந்தத் தேசத்தில் விசேஷமாய்க் காணப்படுகின்றது?
3. மயிலின் தோகை எப்படி இருக்கும்?
4. எந்த மயிலுக்கு மாத்திரம் தோகையுண்டு?

5. மயிலுக்கு எங்கே வசிப்பதில் விருப்பம் அதிகம்?
6. பெண்மயில் ஒரு தடவைக்கு எத்தனை முட்டைகள் இடும்?
7. மயில் குஞ்சுக்கு எவ்வளவு காலம் வரையில் இறகுகள் நன்றாய் வளரா?
8. மயிலின் குரல் எப்படி யிருக்கும்?

---

## 7. தவளை.



குறிப்புக்கள்:—சுருங்கி. விகாரமான. நீரிலும் நிலத்திலும். குதித்துக்குதித்து. ஒருவகைப் பூச்சியை. நீளமாய். ஈரமான இடத்திலேயே.

வினுக்கள்:—

1. தவளை எப்படிப்பட்ட ஜந்து?
2. தவளையின் தோல் எப்படி இருக்கும்?
3. தவளை எங்கு வசிக்கும்?
4. தவளை எப்படிச் செல்லும்?

5. தவளை எதைத் தின்னும்?
6. தவளையின் நாக்கு எப்படி யிருக்கும்?
7. தவளை பெரும்பாலும் எவ்விதமான இடத்திலேயே வசிக்கும்.

---

## 8. சுண்டெலி.



குறிப்புக்கள்:—மிருதுவான மயிர்கள் அடர்ந்திருக்கும். நீண்ட மீசைரோமமும், கூர்மையான நகங்களும். சுவர் முதலானவைகளில் இலேசாய் ஏறும், வட்டமாயும், பெரிதாயும், கூராய். சுவர்களிலும், தரைகளிலுமுள்ள வளைகளில். கூச்சமும் பயமும் உடையது. சாம்பல் நிறச்சுண்டெலி, மரச்சுண்டெலி; வயல் சுண்டெலி.

கேள்விகள்:—

1. சுண்டெலியின் உடம்பு எப்படி இருக்கும்?
2. பூனைக்கு இருப்பதுபோலவே சுண்டெலிக்கும் இருப்பது என்ன?

3. சுண்டெலியின் நகங்களால் அதற்கு உப யோகம் என்ன?
4. சுண்டெலியின் காது, மூக்கு எப்படி இரு க்கும்?
5. சுண்டெலி எவ்விடங்களில் வசிக்கும்?
6. சுண்டெலியின் குணம் என்ன?
7. சுண்டெலிகளின்முக்கியவகைகள் என்ன

---

## 9. ஆலமரம்.



குறிப்புக்கள்:—ஆலமரம், பரந்து இலைகள் அடர்ந்திருக்கும். விழுதுகள். அடிமரத்துக்கு ஆதாரமாய் இருக்கின்றன. சிறியது. பெரிய குண்டுப் பவழம்போல சிவப்பு நிறமுடையதாய்.

2

காக்கைகள் குரங்குகள். விழுது பல்தேய்க்க உதவும், இலைகள் ஆகாரம் இட்டுச் சாப்பிடுவதற்கு உதவும், மரம் நிழல் தரும். அடிமரம் அடுப் பெரிக்க உதவும்.

கேள்விகள்:—

1. நமதுதேசத்திலுள்ள மரங்களுள் பெரிது எது?
2. ஆலமரம் எப்படி யிருக்கும்?
3. ஆலமரத்தின் கிளைகளிலிருந்து தொங்கு பவைகளுக்கு என்ன பெயர்?
4. அவ் விழுதுகளின் உபயோகம் என்ன?
5. ஆலம்விதை பெரியதா, சிறியதா?
6. ஆலம்பழம் எப்படி இருக்கும்?
7. ஆலம்பழங்களை எவைகள் தின்னும்?
8. ஆலமரத்தின் உபயோகம் என்ன?

---

## 10. தென்னைமரம்.

குறிப்புக்கள்:—உஷ்ண தேசங்களில். ஆற்றோரங்களிலும், கடற்கரைகளிலுமுள்ள மணற் பூமியில். அடிமரம் கட்டடம் முதலியவைகளுக்கும், ஓலைகள் கீத்து முடையவும், தேங்காய் தின்பதற்கும், எண்ணெய் இறக்குவதற்கும், தேங்காய் மட்டை கயிறு திரிப்பதற்கும், தென்னைமட்டை அடுப்பு எரிக்கவும், இளநீர் குடிப்பதற்கும், கொட்டாங்கச்சி அகப்பையாகவும் உதவும். நாற்பது,

அல்லது அறுபது அடி உயரம். கிளைகள் இல்லை. பத்து அல்லது பதினைந்து காய்கள். ஐந்து அல்



லது ஆறு வருஷத்துக் கப்பால். நாற்பது அல்லது ஐம்பது வருஷகாலம் வரையில்.

கேள்விகள்:—

1. தென்னைமரம் எந்தத்தேசங்களில் விசேஷமாய்ப் பயிராகும்?

2. தென்னைமரம் எப்படிப்பட்ட பூமிகளில் செழித்து வளரும்?
3. தென்னைமரத்தின் உபயோகம் என்ன?
4. தென்னைமரம் எத்தனை அடி உயரம் வளரும்?
5. தென்னை மரத்துக்குக் கிளைகள் உண்டா?
6. தென்னை மரத்தில் ஒவ்வொரு குலையிலும் எத்தனை காய்கள் இருக்கும்?
7. தென்னைமரம் முளைத்துஎத்தனைவருஷத்துக்கு அப்பால் காய்க்க ஆரம்பிக்கும்?
8. தென்னைமரம் எத்தனை வருஷம் வரையில் காய்க்கும்?

## 11. நாய்.



குறிப்புக்கள்:—பலவிதமாய். சில நாய்களுக்கு மிருதுவாயும், வேறுசில நாய்களுக்கு கரடுமுரடாயும், இன்னுஞ்சில நாய்களுக்கு சுருட்டையாயும்,

வேறு சில நாய்களுக்குச் செங்குத்தாயும். உடம்பு நீண்டும், தலை குறுகியும், வால் நீண்டு வளைந்தும், கால்கள் மெல்லியனவாய் நீண்டும், சில நாய்களுக்குத் தலைபெரிதாயும், சில நாய்களுக்குக் காது மடிந்தும், வேறுசில நாய்களுக்குக் காது நிமிர்ந்தும் பாதங்கள் மிருதுவாயும், விரல்களின் நகங்கள் மழுங்கியும். குழிதோண்டுவதற்கு. நாக்கிலிருந்து. நக்கியே. நண்பன்போலவும் வேலைக்காரன்போலவும். அறிவு அதிகம், யஜமானனிடத்தில் அன்பு பாராட்டும், நன்றி யறிவுள்ள பிராணி. தன் யஜமானனையும், அவன் பொருள்களையும் காக்கும். சோற்றையும் மாமிசத்தையும்.

வினாக்கள்:—

1. நாய்களின் நிறமும் உருவமும் எப்படி இருக்கும்?
2. நாய்களின் உடலில் மயிர் எப்படி இருக்கும்?
3. நாயின் அமைப்பு எவ்விதமாய் இருக்கும்?
4. நாய்களின் கால்விரல்களிலுள்ள நகங்கள் மழுங்கியிருப்பது எதற்கு அநுகூலமாயிருக்கின்றது?
5. நாய்களுக்கு வியர்வை எங்கிருந்து உண்டாகின்றது?
6. நாய்கள் நீர் முதலியவற்றைக் குடிப்பது எப்படி?
7. நாய் ஒரு மனிதனுக்கு எப்படி உதவும்?

8. நாயின் குணம் என்ன ?
9. நாய் எவைகளைத் தின்னும் ?

## 12. ஆடு.



குறிப்புக்கள்:-வெள்ளாடு, செம்மறி ஆடு. வெள்ளாடு செம்மறியாட்டைக் காட்டிலும் கொஞ்சம் உயரமுள்ளது. வெள்ளாட்டின் உடம்பு பெரியது, ஆனால் அது பளுவாயிராது. கால்கொஞ்சம் மெல்லியதாயும் உறுதியாயும், வால்குட்டையாயும். வெள்ளாட்டில் ஆணுக்கும் பெண்ணுக்கும் கொம்புகள் உண்டு, செம்மறியாட்டில் ஆணுக்கு மாத்திரம் கொம்புகள் உண்டு, ஆடுகளின் குளம்புகள் பிளவுபட்டிருக்கும், ஆடுகளின் கழுத்துக்களில் முலைபோல இரண்டு சதைகள் தொங்கும். தாடி உண்டு. வெள்ளாடு அதிக தைரியமுள்ள ஜந்து, சண்டைசெய்வதற்குச் சித்தமாயிருக்கும், சுருசுருப்புள்ளது; மலையின் உச்சிகளில் சாயாமலும் சறுக்காமலும் ஓடும். செம்மறியாடு அவ்

வளவு சுருசுருப்புள்ளதன்று. புல், சில தழைகள், ஆத்திக்கீரை. வேலமரம் முதலிய சிற்சில முள் மரங்களின் தழைகள். பானமாக. மருந்துக்கு. உணவாக. பைகள் தைக்கவும், பாதரட்சை முதலியன செய்யவும், கத்தி உறைகள் முதலியன செய்யவும்.

வினாக்கள்:—

1. ஆடுகளில் எத்தனை வகைகள் உண்டு?
2. அவைகளின் பேதங்கள் என்ன?
3. ஆட்டின் தேக அமைப்பு எப்படி?
4. செம்மறியாட்டுக்கு இல்லாமல் வெள்ளாட்டுக்கு மாத்திரம் இருப்பது என்ன?
5. வெள்ளாட்டின் குணம் என்ன?
6. செம்மறியாட்டின் குணம் என்ன?
7. ஆடுகள் எதைத் தின்னும்?
8. வெள்ளாடுமாத்திரம் தின்னும் தழைகள் எவை?
9. ஆட்டின்பால் நமக்கு எவ்விதமாய் உபயோகப்படுகின்றது?
10. வெள்ளாட்டின் பால் முக்கியமாய் எதற்கு உதவும்?
11. ஆட்டுமாமிசம் நமக்கு எவ்விதமாய் உபயோகப்படுகின்றது?
12. ஆட்டின்தோல் எவைகளுக்கு உதவும்?

———

## 13. பேரீச்சமரம்.



குறிப்புக்கள்:—இந்தியாவிலும், அரேபியாவிலும். உயரமாய் இருக்கும், கிளைகள் இல்லை, நுனியில்ஓலைகள்உண்டு. ஒவ்வொன்றும்பத்து அல்லது பன்னிரண்டு அடி நீளம். பார்வைக்கு இறகுகள் போல் இருக்கும். ஓலைகளுக்கு நடுவில். அக்டோபர் நவம்பர் மாதங்களில். பத்துப் பதினைந்து குலைகள். எட்டு அல்லது பத்துஅடி நீளம். பழம் மனிதர்களுக்கும் ஒட்டகங்களுக்கும் உணவாக உபயோகப்படுகின்றது. ஓலை குளிர்ந்த நிழலைத் தரும்,

மரத்திலிருந்து ஈச்சஞ்சாறு இறக்கலாம். அதை புளிக்கவைத்தால், ஒயின் உண்டாகும். மரம் அடுப்பு எரிக்கவும், குடிசைகள் கட்டவும் உதவும், ஓலை பாய் பின்னவும் கூடைமுடையவும் உதவும், ஈச்ச மட்டைகளிலிருந்து நார்கள் எடுத்துக் கயிறு திரிக்கலாம்.

வினாக்கள்:—

1. பேரீச்சமரம் எந்தத் தேசங்களில் விசேஷம்?
2. மரத்தின் அமைப்பு எப்படி?
3. ஓலையின் நீளம் எவ்வளவு?
4. அவைகள் எவைகள்போல இருக்கும்?
5. ஈச்சம்பழக் குலைகள் மரத்தில் எங்கு இருக்கும்?
6. ஈச்சம் பழங்கள் எந்த மாதங்களில் பழுக்கும்?
7. ஒவ்வொரு மரத்திலும் எத்தனை குலைகள் இருக்கும்?
8. ஒவ்வொரு பழக்குலையின் நீளம் என்ன?
9. ஈச்சம்பழங்கள் எவ்விதமாய் உபயோகப் படுகின்றன?
10. ஈச்சமரம் நமக்கு எவ்விதமாய் உபயோகப் படுகின்றது?

## 14. வாழைமரம்.



குறிப்புக்கள்:-உஷ்ண தேசங்களில், மலைவாழை, வயல் வாழை, செவ்வாழை, பச்சைவாழை, கரு வாழை, ரஸ்தாலி, முதலியன. கிளைகள் இல்லை, இலைகள் நீண்டு அகலமாயும் இருக்கும். நன்றாய் வளர்ந்தமரம் சற்றேறக்குறைய பத்து அல்லது பதினைந்து அடி உயரம் இருக்கும். மரம் மனிதனின் தொடைபோல் அடி பருத்தும் நுனிசிறுத்

னும்மைக்குமிருதுவாயும் இருக்கும். 18மாதங்களில், தார்போடுதல். ஒன்று. பத்து அல்லது பதினைந்து சீப்புக்கள். பன்னிரண்டு. வாழைக்கன்று. தார் போட்டுக் கீழ்க்கன்று போட்டவுடன். முதிர்ந்த வாழைக்காயை பழுக்கவைப்பதால். வாழைக்காய் வாழைப்பூ வாழைத்தண்டு சமையலுக்கும், இலை உலராதமட்டை உணவுஇட்டுச் சாப்பிடுவதற்கும், உலர்ந்தமட்டை நாராகவும். உதவுகின்றன. வாழை மரம் வீடுகளில் சுபகாரியங்கள் நடக்கும்பொழுது. வீடுகளை அலங்கரிப்பதற்கு உதவுகின்றன.

வினுக்கள்:—

1. வாழைமரம் எந்தத்தேசங்களில் விசேஷமாய்ப் பயிராகும் ?
2. வாழைமரத்தின் சில ஜாதிகளைச் சொல்லுக.
3. வாழைமரத்தின் அமைப்பு எப்படி ?
4. வாழைமரம் எத்தனை மாதங்களில் காய்க்கும் ?
5. வாழைமரம் காய்ப்பதற்கு என்ன என்று சொல்லுவார்கள் ?
6. ஒவ்வொரு மரமும் எத்தனை தார்கள் போடும் ?
7. ஒருதாரில் எத்தனை சீப்புக்கள் இருக்கும்?
8. ஒவ்வொரு சீப்பிலும் எத்தனை காய்கள் இருக்கும் ?
9. வாழைமரத்தின் சிறியதுக்கு என்ன என்று பெயர் ?

10. வாழைமரம் எப்பொழுது பட்டுப்போகும்?
11. வாழை மரத்தினின்று வாழைப்பழம் நமக்கு எப்படிக் கிடைக்கும்?
12. வாழைமரம் நமக்கு எவ்விதமாய் உபயோகப்படுகின்றது?

---

## IV. அத்தியாயம்.

### சிறு கதைகள்.

குறிப்பு:—உபாத்தியாயர்கள் முதலில் இச்சிறுகதைகளை பிள்ளைகளுக்குக் கொஞ்சம் கொஞ்சமாய் படித்துக் காட்டவேண்டும். அப்பால் அவர்கள், பிள்ளைகள் இக்கதைகளை நன்றாய்த் தெரிந்து கொண்டார்களாவென்பதை அறியும்பொருட்டு, இக்கதைகளைக்குறித்து, பிள்ளைகளைக் கேள்விகேட்கவேண்டும். இவ்வாறு அவர்கள் இரண்டு முறை செய்யவேண்டும். பிறகு அவர்கள் இக்கதைகளை, பிள்ளைகள் தங்கள் சொந்தவாக்கியத்தில் சொல்லச் செய்யவேண்டும்.

### 1. ஒரு பிராமணனும் அவன் குமாரர்களும்.

ஒரு கிராமத்தில் ஒரு பிராமணன் இருந்தான். அவனுக்கு நான்கு குமாரர்கள் இருந்தார்கள். அந்தப் பிராமணன் தன் குமாரர்களில் மூத்தவனுக்குத் தன்னுடைய சொத்துக்கள் எல்லாவற்றையும் கொடுத்தான், மற்ற குமாரர்கள் மூன்றுபேர்களுக்கும், அவன் நன்றாய்ப் படிப்புச் சொல்லிவைத்தான். சில வருஷங்களுக்குள் மூத்த குமாரன் தன்னுடைய பணத்தையெல்லாம் செலவழித்துவிட்டான். அதனால் அவன் மிகவும் கஷ்டப்பட்டான். இளையகுமாரர்கள் நன்றாய்ப் படித்திருந்தார்களாதலால், அவர்கள் தங்கள் படிப்பினால் அதிக பணம் சம்பாதித்தார்கள்.

ஆதலால் பிள்ளைகளே! பணத்தைக் காட்டிலும் படிப்பே சிறந்தது.

## 2: இரண்டு சகோதரர்கள்.

ஒரு கிராமத்தில் ஒரு செட்டிக்கு இரண்டு குமாரர்கள் இருந்தார்கள். அவர்களில் மூத்தவன் பெயர் இராமன். இளையவன பெயர் கோவிந்தன். ஒரு நாள் அவர்கள் இருவரும் ஒரு மாந்தோப்புக்குப் போனார்கள். அப்போது கோவிந்தன் இராமனைப்பார்த்து "அண்ணா! இந்த மாமரத்தில் நல்ல பழங்கள் இருக்கின்றன. அவைகளை எனக்குப் பறித்துக்கொடு" என்றான்.

அதற்கு இராமன் "இந்த மாமரம் நம்முடையதன்று; நமக்குச் சொந்தம் அல்லாத பொருளை நாம் தொடக்கூடாது. இதை நாம் பறித்தால், தோட்டக்காரன் நம்மை அடிப்பான்" என்று சொன்னான்.

கோவிந்தன் அண்ணன் சொன்னதைக் கேளாமல், அந்த மரத்தில் ஏறிப் பழம் பறித்துக் கொண்டிருந்தான். அப்போது தோட்டக்காரன் ஓடி வந்து, கோவிந்தனைப் பிடித்துக்கொண்டு, அடித்துத் துரத்தி விட்டான்.

ஆகையால் பிள்ளைகளே! பெரியவர்கள் சொல்லுகிற நல்லவார்த்தையைக் கேளாவிட்டால், நமக்குக் கெடுதி உண்டாகும்.

## 3. ஒரு விளையாட்டுப் பையன்.

ஒரு ஊரில் ஒரு இடைப்பையன் இருந்தான். அவன் தினந்தோறும் தன் ஆடுகளைத் தன் ஊருக்குச் சமீபத்திலிருந்த ஒரு மலையின் அடிவாரத்தில் மேய்த்துவந்தான்.

இப்படியிருக்க ஒரு நாள், அவன் விளையாட்டாகப் பொய்சொல்லி, அம்மலையடிவாரத்துக்குச் சமீபத்திலுள்ள

117659

வயல்களில் வேலைசெய்து கொண்டிருந்தவர்களை ஏமாற்ற எண்ணினான். பிறகு அவன், திடீரென்று பொய்யாக, 'புலி வருகிறது, புலி வருகிறது' என்று உரக்கக் கூவினான்.

இதைக்கேட்டவுடன், அங்கு வயல்களில் வேலை செய்துகொண்டிருந்தவர்கள், அப் பையனைக் காப்பாற்றும் பொருட்டு, அவனிருந்த இடத்துக்கு ஓடிவந்தார்கள். அப் பொழுது, அப்பையன் அவர்கள் ஏமாந்ததைப் பார்த்து கைகொட்டிச் சிரித்தான். அப்பால் அவ் வேலைக்காரர்கள் பையன் பொய் சொன்னான் என அறிந்து, திரும்பத் தங்க ளிடம் சென்றார்கள்.

இவ்வாறே அப் பையன், இரண்டு முறை பொய்யாக 'புலி வருகிறது,' 'புலி வருகிறது' என்று கூவினான். இவ் வாறே அவ் வேலைக்காரர்களும் இரண்டு முறை பையனி ருந்த இடத்துக்கு ஓடிவந்து ஏமாந்தார்கள்.

அப்பால், உண்மையாகவே ஒரு புலி அப் பையனி ருந்த இடத்தை நோக்கிவந்தது. அப்பொழுது அப்பையன் அதிக பயங்கொண்டு உண்மையாகவே 'புலி வருகிறது' 'புலி வருகிறது' என்று உரக்கக் கூவினான். ஆயினும், அவ் வேலைக்காரர்கள் பையன் முன்போலவே பொய்யாகக் கூவு கிறான் என்று நினைத்து, அவ்விடம் போகாமல் இருந்தார் கள். அதனால், அப்பையனும் அவனுடைய ஆடுகளும், புலி யால் அடிபட்டு இறந்தார்கள்.

ஆதலால், பிள்ளைகளே! நாம் விளையாட்டாகவும் பொய் பேசக்கூடாது.

## 4. ஒரு மூடச் சோதிடன்.

ஒரு அரசனிடத்தில் ஒரு சோதிடன் இருந்தான். அவன் தன்னிடம் சோதிடம் கேட்க வருபவர்களில்

ஒவ்வொருவரையும் பார்த்து 'நீ சீக்கிரத்தில் இறந்து போவாய்' என்று சொல்லிவந்தான்.

ஒரு நாள் அந்த அரசன், அச் சோதிடனைப்பார்த்து, "நான் இன்னும் எவ்வளவுகாலம் ஜீவித்திருப்பேன்' என்று கேட்டான். அதற்கு அந்தச் சோதிடன் 'ஐயா தாங்கள் இன்னும் மூன்று நாள் ஜீவித்திருப்பீர்கள்' என்று மறு மொழி சொன்னான்.

இதைக்கேட்ட அரசன், 'ஐயோ! இவ்வுலகத்தில் வெகுகாலம் ஜீவித்திருக்காமல், மூன்று நாளில் இறக்கப் போகிறேனே! நான் என்னசெய்வேன்' என்று பலவித மாகப் புலம்பி அழுதான். இதைப்பார்த்த மந்திரி, உடனே சோதிடனைப் பார்த்து, 'ஐயா! தாங்கள் எல்லாருடைய வும் ஆயுள்களை அறிந்து சொல்கிறீர்கள். தாங்கள் இவ்வுல கத்தில் எவ்வளவுகாலம் ஜீவித்திருப்பீர்கள், அதைத் தெரிந்துசொல்லவேண்டும்" என்று கேட்டான். அதற்குச் சோதிடன் மந்திரியை நோக்கி 'ஐயா! நான் இன்னும் முப்பது வருஷகாலம் இவ்வுலகத்தில் ஜீவித்திருப்பேன்' எனப் பதில் உரைத்தான்.

உடனே மந்திரி, தன் கையில் வைத்திருந்த ஒருகத்தி யால் அச்சோதிடனை ஒரே வெட்டில் இரண்டு துண்டு களாகச் செய்தான். பிறகு அவன், அரசனைப்பார்த்து 'ஐயா! இச்சோதிடன் தன்னுடைய ஆயுளையே தெரிந்து கொள்ளவில்லையே! இவனு பிறருடைய ஆயுளைத்தெரிந்து சொல்லவல்லவன். இவனுடைய வார்த்தையில் நம்பிக்கை கொண்டு, இவ்வாறு புலம்புகிறீர்களே! இச்சோதிடனுக்கு ஒன்றும்தெரியாது. இவன் ஒருமூடன். ஆதலால், தாங்கள் இவன் வார்த்தையில் நம்பிக்கைகொண்டு, மனம் வருந்த வேண்டாம். அழுகையை நிறுத்துங்கள்' என்றுசொன்னான்.

அரசனும், தன்னுடைய மூடத்தனத்தை நினைத்து, வெட்கமடைந்து, அழுகையை நிறுத்தி, முன்போலச் சந்தோஷமாய் இருந்தான்.

ஆதலால், பிள்ளைகளே! சோதிடர்கள் சொல்வதெல்லாம் உண்மை என நம்பலாகாது.

### 5. ஓநாயும், கழுதையும்.

முன்னொரு காலத்தில் புல் நிறைந்த ஒரு வயலில் கழுதையொன்றுமேய்ந்துகொண்டிருந்தது. அதைப்பார்த்த ஒரு ஓநாய், அந்தக்கழுதையைப் பிடித்துத் தின்பதற்காக, ஓடிவந்தது. அவ்வாறு ஓநாய் ஓடிவருவதைப்பார்த்தவுடன், கழுதை நொண்டி நொண்டி நடந்து பாசாங்கு செய்தது.

அப்பொழுது ஓநாய் கழுதையைப் பார்த்து 'நீ ஏன் நொண்டி நொண்டி நடக்கின்றாய்? என்று கேட்டது. அதற்குக் கழுதை "நான் ஒரு புதரில் மேய்ந்து கொண்டிருந்தேன். அங்கே ஒரு முள் என் பின்னங்காலில் தைத்தது. அதைப் பிடுங்குவதற்கு என்னால் முடியவில்லை. நீ அந்த முள்ளை வாங்கிவிடுவாயானால், நீ என்னைச் சுகமாய்ப் புசிக்கலாம். இல்லாவிட்டால், அந்த முள் உன் தொண்டையில் பொத்துக்கொள்ளும். ஆதலால், நீ அந்த முள்ளை எவ்விதத்தாலாவது பிடுங்கிவிடவேண்டும்' என்று சொல்லிற்று. ஓநாயும் அவ்விதமே செய்வதாக ஒப்புக்கொண்டு, அந்த முள்ளைப் பிடுங்க யத்தனித்தது. அப்போது, கழுதை திடீரென்று தன் பின்னங்கால்களால் அதை விசையாய் உதைத்து விட்டு, அதிவேகமாய் ஓடிப்போயிற்று.

ஓநாய், கழுதை உதைத்த உதையால் அதிக காயம் அடைந்து வருந்தி, 'நான் கழுதையைக் கொல்லுவதற்காக அதன் சமீபத்தில் ஓடி வந்தேன். அப்படிச் செய்யாமல், அதற்கு வைத்தியம் செய்யத்தொடங்கியது என்குற்றமே!

னக்குத் தகாத காரியத்தைச் செய்தேனுகையால், அதன் லன் உடனே கிடைத்தது' என்று சொல்லிக்கொண்டே போய்விட்டது.

## 6. நரியும், மரம் வெட்டுகிறவனும்.

ஒரு காட்டில் பல வேட்டைநாய்களுக்கு எதிரில் ஒரு ரி ஓடிக்கொண்டிருந்தது. அப்பொழுது அந்நாய்கள் அந் ரியை துரத்த ஆரம்பித்தன. அக்காட்டில் ஓரிடத்தில் ஒரு வன் மரம் வெட்டிக்கொண்டிருந்தான். உடனே அந்த நரி, அந்தமரம் வெட்டுகிறவனிடம் சென்று, 'ஐயா! என்னை வேட்டை நாய்கள் துரத்திக்கொண்டு வருகின்றன. நான் அவைகளிடம் அகப்பட்டுக்கொண்டால், பிறகு அவைகளிட மிருந்து தப்பி ஓடுவது முடியாது. ஆகையால், தாங்கள் கொஞ்சம் தயவுசெய்து, இங்கு ஒளித்துக்கொள்ள எனக்கு இடம் கொடுக்கவேண்டும். என்று வேண்டிக்கொண்டது. அவ்வாறே மரம் வெட்டுகிறவனும், அந்தநரிக்கு ஒளித்துக் கொள்வதற்காக தன் இருப்பிடத்தில் ஓர் மூலையைக் காட் டினுன். அந்த நரியும் அம்மூலையிற் போய் ஒளித்துக் கொண்டது.

அப்பால் கொஞ்சநேரம் கழித்து, ஒரு வேட்டைக் காரன் தன்வேட்டைநாய்களுடன் அந்த மரம் வெட்டுகிறவ னிடம் வந்து, அவனை நோக்கி, 'ஐயா! இவ்விடம்நரியொன்று ஓடி வந்ததே! அது எங்கு சென்றது' என்று கேட்டான். அதற்கு மரம் வெட்டுகிறவன் 'ஐயா நான் அதை அறியேன். அது எங்கு போயிற்றோ' எனப் பதில் உரைத்தான். ஆயி னும், அவன் அவ்வாறு சொன்னபொழுது, அந்த நரிஒளித் துக்கொண்டிருந்த இடத்தை அவ் வேட்டைக்காரனுக்குத் தெரிவிக்கும் வண்ணமாய், தன் விரலால் அவ்விடத்தைக் காட்டிக் கொண்டிருந்தான். ஆனால் வேட்டைக்காரன்

அதைக் கவனிக்காமல், தன் வேட்டைநாய்களுடன் அந்நரியைத் தேடிக்கொண்டு சென்றான்.

பிறகு அந்த நரி, தான் ஒளித்திருந்த இடத்தினின்று வெளியேவந்து, தனக்கு ஒளித்துக்கொள்ள இடம் கொடுத்துக் காப்பாற்றின மரம் வெட்டுகிறவனுக்கு வந்தனம் அளிக்காமலே, அவ்விடத்தைவிட்டுச் செல்ல ஆரம்பித்தது.

இதையறிந்த அம்மரம் வெட்டுகிறவன், அந்நரியைப் பார்த்து 'ஓ! நன்றியற்ற நரியே! நான் உனக்கு ஒளித்துக்கொள்ள இடம் கொடுத்து, உன்னை அவ்வேட்டைநாய்களிடமிருந்து காப்பாற்றினேன். நீ இப்பொழுது அதற்காக எனக்கு வந்தனம்கூட சொல்லாமல் போகின்றாயே!'' என்று சொன்னான். அதற்கு அந்த நரி "நீ உண்மையாக எனக்கு உபகாரம் செய்திருந்தால், நான் உனக்கு வந்தனம்செய்தே இருப்பேன். வேட்டைக்காரனுக்கு பதில்சொல்லிக்கொண்டிருந்தபொழுது, நீ உன் விரலை அவன் பக்கமாக காட்டிக் கொண்டிருந்தாய். அவ் வேட்டைக்காரன் அதைக் கவனித்திருந்தால், உடனே அவன் தன் வேட்டை நாய்களை ஏவி, என்னைப் பிடித்திருப்பான். ஆதலால், நீ எனக்கு உண்மையில் உபகாரம் செய்யவில்லை. ஆதலால்தான், நான் உனக்கு வந்தனம் செய்யவில்லை!' என்று சொல்லிக் கொண்டே போயிற்று.

ஆகையால் எவரும், வார்த்தையிலும் செய்கையிலும் ஒரே வண்ணமாய் நடக்கவேண்டும்.

சென்னை :

டி. வி. செல்லப்ப சாஸ்திரி அண்டு சன்

வெளியிட்ட புதிய தமிழ் புத்தகங்கள்.

| | | ரூ. அ. |
|---|---|---|
| 1. | சென்னை இராஜதானி பூகோளம் ... | 0 |
| 2. | மதுரை ஜில்லா பூகோளம் ... ... | 0 |
| 3. | திருநெல்வேலி ... ... ... | 0 |
| 4. | சேலம் ... ... ... | 0 |
| 5. | இராமனாதபுரம் ... ... ... | 0 |
| 6. | திருச்சிநாப்பள்ளி ... ... ... | 0 |
| 7. | தஞ்சாவூர் ... ... ... | 0 |
| 8. | தென்னார்காடு ... ... ... | 0 |
| 9. | வடஆர்காடு ... ... ... ... | 0 |
| 10. | கோயம்புத்தூர் ... ... ... | 0 |
| 11. | நீலகிரி ... ... ... ... | 0 |
| 12. | சித்தூர் ... ... ... ... | 0 |
| 13. | செங்கல்பட்டு ... ... ... ... | 0 |
| 14. | இளைஞர் சொற்றொடராக்கம் ... ... | 0 |
| 15. | இருவர் சொற்றொடராக்கம் ... ... | 0 |
| 16. | தமிழ் இந்துதேச சரித்திரம் II ... | 0 1 |
| | இங்கிலீஷ் தமிழ் காப்பி புத்தகங்கள் பிரதி 1-க்கு | 0 |
| | ... ... ... டஜன் ... ,, | 0 1 |
| | 6-டஜன் அல்லது ½ குரோசுக்கு ,, | 3 |
| | 12-டஜன் அல்லது 1 குரோசுக்கு ,, | 6 |

ஒரே தடவையில் மேற்கூறிய புத்தகங்களை அதி
வாங்குகிறவர்களுக்கு அதிக கமிஷன் கொடுக்கப்படு

வேண்டியவர்கள் அடியிற் காட்டிய விலாசத்
எழுதி மேற்கூறியவைகளைப் பெற்றுக் கொள்ளலாம்.

டி. வி. செல்லப்ப சாஸ்திரி அண்டு சன்

புத்தக வியாபாரிகள்,

வால்டாக்ஸ் ரோட், சென்னை

T. V. C. PRESS, MADRAS.